PUMA SE, PUMA WAY 1, D-91074 Herzogenaurach

FOREVER FASTER PUMA

# நடத்தை நடைமுறை தொகுப்புச் சட்டம்

பூமா [Puma] மனித உரிமைகளை மதிக்கிறது. இந்த மதிப்பு நாங்கள் இயங்குகின்ற சமூகத்துடனும் எமது வழங்கல் சங்கிலியில் உள்ள எமது பங்குதாரர்களிடமும் எமக்குள்ள ஈடுபாட்டை காட்டுகிறது.

பூமா சுற்றுச்சூழலை மதிக்கிறது. எமது நிறுவனம் மற்றும் எமது வழங்கல் சங்கிலி ஆகிய இரண்டின் சுற்றுச்சூழல் மீதான தாக்கத்தை நிர்வகிக்க, குறைக்க மற்றும் அறிக்கையளிக்க நாங்கள் தீர்மானமாக இருக்கிறோம்.

இந்த இரண்டு ஈடுபாட்டுறுதிகளும் வெளிப்படையாகவும், அனைவருக்கும் தெரியும் விதமாகவும் பூமாவின் நடத்தை நடத்தை நடைமுறை தொகுப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றன.

எமது அனைத்து ஊழியர்களும், விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் முழுமையாக இந்த நடத்தை நடைமுறை தொகுப்புச் சட்டத்திற்கு இணக்கமாக நடக்க வேண்டும். வித்தியாசங்களும் முரண்களும் எழுகிற இடங்களில் உச்சபட்ச செந்தரங்கள் பின்பற்றப்படும்.

## வேலைவாய்ப்பு உறவு:

விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் ஊழியர்களை மதிக்கின்ற, குறைந்த பட்சம் தேசிய மற்றும் சர்வதேச தொழிலாளர் மற்றும் சமூகப் பத்திரத்தன்மை சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற வேலைவாய்ப்பின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை கைக்கொள்ளவும் இணங்கி நடக்கவும் வேண்டும்.

## குழந்தை தொழிலாளர் இன்மை:

விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் 15 வயதுக்கு உட்பட்ட, அல்லது உள்ளூர் சட்டத்தின் படி குறைந்தபட்ச வயது அல்லது கட்டாயக் கல்வியை முடிக்கும் வயது இதில் எது அதிகமோ அந்த வயதுக்கு கீழ் உள்ளவர்களை பணியில் அமர்த்தக் கூடாது.

## பாதுகாப்பான பணிச்சூழல்:

விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் ஒரு பாதுகாப்பான மற்றும் துப்புரவான பணிச்சூழலை அனைத்து ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும். விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் பணியிடத்தில் விபத்துக்களை தடுக்க எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் மற்றும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறை வழக்கங்களை தீவிரமாக பரப்பி ஊக்கப்படுத்த வேண்டும்.

## சங்கம் வைக்கவும் கூட்டு பேரத்திற்கும் சுதந்திரம்:

விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் தமது ஊழியர்களுக்கு தொழிற்சங்கங்களிலும் அல்லது இதர தொழில்துறை தொடர்பான சங்கங்களில் சேரவும் கூட்டு பேரம் செய்யவும் அவர்களுக்குள்ள உரிமைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். இந்த உரிமைகள் எந்த ஒரு துன்புறுத்தல், குறுக்கீடு அல்லது பழி வாங்குதல் பயமின்றி வழங்கப்பட வேண்டும்.

## பாகுபாடு இன்மை:

விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் தமது ஊழியர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டக் கூடாது. ஊழியர்கள் மரியாதையுடன், மதம், வயது, பால், கர்ப்பம், திருமண நிலை, ஊனம், தேசியம், இனம், அரசியல் பார்வை அல்லது பாலியல் சார்பு போன்ற பாகுபாடுகள் இன்றி நடத்தப்பட வேண்டும்.

## நன்னெறிமிக்க தொழில் நடைமுறை வழக்கங்கள்

பூமா எஸ்இ [PUMA SE] தமது வழங்கல் சங்கிலியிலோ அல்லது தமது சொந்த இயக்கங்களிலோ ஊழலை பொறுத்துக் கொள்ளாது.

## கண்ணியம் மற்றும் மரியாதை

துன்புறுத்தல், உடல்ரீதியான தண்டனை, உடல்சார், பாலியல், மனரீதியான அல்லது தவறான வார்த்தைகளை பயன்படுத்தல் ஆகியவை வழங்கல் சங்கிலியில் பொறுத்துக் கொள்ளப்பட மாட்டாது. விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் கைதிகள், ஒப்பந்த தொழிலாளர்கள், அடிமை தொழிலாளர்கள் போன்ற கட்டாய ஊழியர்களை பயன்படுத்தக் கூடாது.

## நியாயமான ஊதியம்:

ஒவ்வொரு ஊழியரும் தமது வார பணிக்கு அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான அளவு  விருப்ப வருமானத்தை பெற உரிமை கொண்டுள்ளார். முதலாளிகள் தமது ஊழியர்களுக்கு ஊதியங்கள் மீதான அனைத்து சட்டத்தேவைகளுடனும் இணக்கமான முறையில், குறைந்தபட்ச ஊதியம் அல்லது துறையில் நிலவும் பொருத்தமான ஊதியம் இதில் எது அதிகமோ அந்த ஊதியத்தையும் சட்டம் அல்லது ஒப்பந்தத்தால் நிறைவேற்ற தேவைப்படுகிற இதர பலன்களையும் வழங்கவேண்டும்

ஊதியமானது ஊழியரின் குறைந்தபட்ச தேவைகளை நிறைவேற்றவில்லை எனில் அல்லது விருப்ப வருமானத்தை வழங்கவில்லை எனில்  ஒவ்வொரு முதலாளியும் தமது சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடம் ஆலோசித்து படிப்படியாக வருமானத்தில் அதிகரிப்பை கொண்டு வர பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## ஆதிகப்படியான பணிநேரம் கூடாது:

விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் ஊழியர்களை உள்ளூர் தொழிலாளர் சட்டம் அனுமதித்துள்ள வழக்கமான பணி வாரம் மற்றும் அதிகபட்ச ஓவர்டைமுக்கு மேல் வேலை வாங்கக் கூடாது. ஒரு வழக்கமான பணி வாரம் 48 மணி நேரத்தை தாண்டக் கூடாது. மேலும் ஒவ்வொரு 7 நாட்களுக்கு ஒரு நாள் விடுமுறை என்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

சில விதிவிலாகான சூழ்நிலைகளை தவிர மற்ற காலங்களில் வழக்கமான பணிவாரம் மற்றும் ஓவர்டைம் பணிநேரங்களின் கூட்டுத்தொகை 60 மணியைத் தாண்டக் கூடாது. ஓவர்டைம் ஒரு விருப்பமான, அதிகமான சம்பளத்துடன் இருக்க வேண்டும் மற்றும் இது ஒழுங்கான அடிப்படையில் கோரப்படக்கூடாது.

## சுற்றுச்சுழலை மதிக்கவேண்டும்

விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் உள்ளூர் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் அல்லது சர்வதேச தொழில் செந்தரங்கள் இவற்றில் எது அதிகமோ அதை மதிக்க வேண்டும். விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் சுற்றுச்சூழல் பாதிப்பை அளந்து படிப்படியாக அதை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| பிராந்தியம் | தொலைபேசி | மொழிகள் |
|---|---|---|
| தென் கிழக்கு ஆசியா | +84 989385612<br>+628 11 227 2143 | |
| தெற்கு ஆசியா | +880 1708469256 | |
| கிழக்கு ஆசியா | +86 13622884924 | |
| வட மற்றும் தென் அமெரிக்கா | +503 77871132 | |
| ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள் & ஆப்ரிக்கா | +49 15114743876<br>+90 532 483 6685 | |

விற்பனையாளர்களும் அவர்களுடைய துணை ஒப்பந்ததாரர்களும் தமது  தொழில் நடைமுறை வழக்கங்கள் ஆய்வுக்கு உட்பட்டவை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லா துணை ஒப்பந்ததாரர்களும் பூமாவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும் மேலும் நடத்தை நடத்தை நடைமுறை தொகுப்புச் சட்டத்தை துணை ஒப்பந்ததாரர்களும் மதித்து நடப்பதை விற்பனையாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இந்த நடத்தை நடைமுறை தொகுப்புச் சட்டத்தை மீறுபவர்களைக் கண்டால் அவர்களிடம் தொழிலை முறித்துக் கொள்ளும் முழு உரிமையையும் பூமா எஸ்இ தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்த நடத்தை நடைமுறை தொகுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றிய அனைத்து விசாரணைகளையும், புகார்கள் மற்றும் ஆலோசனைகளையும் sustain@puma.com க்கு அனுப்பவும் அல்லது உங்கள் அருகில் உள்ள பூமா சஸ்டெய்னபிளிட்டி [PUMASustainability] அணியை அனுகவும்.

V. 06. 2016